# எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெட்

Elnet Technologies Ltd

**பதிவு அலுவலகம்: எல்நெட் சாப்ட்வேர் சிட்டி, TS 140,**
**பிளாக் 2 மற்றும் 9, ராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை-600 113.**
**CIN: L72300TN1990PLC019459**
**போன்: 044-22541337/1098; பேக்ஸ்: 044-22541955**
**இ-மெயில்: elnet@md4.vsnl.net.in; இணைய தளம்: www.elnettechnologies.com**

## அறிவிப்பு

வருடாந்திர அறிக்கை இணைக்கப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெட் (CIN: L72300TN1990PLC019459) கம்பெனியின் 26-வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் 06.07.2017 வியாழக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் (இந்திய நேரப்படி) நியூ உட்லண்ட்ஸ் ஓட்டல் பிரைவேட் லிமிடெட், எண். 72 -75, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை-600 004 என்ற முகவரியில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

26-வது வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் டிவிடெண்ட் ஏதேனும் அறிவிக்கப்பட்டால் அதனை வழங்குவதற்காக கம்பெனியின் பங்குதாரர்களின் பதிவேடும், பங்குமாற்று புத்தகங்களும் 30.06.2017 வெள்ளிக்கிழமை முதல் 06.07.2017 வியாழக்கிழமை வரை (இந்த இரு தினங்கள் உள்பட) மூடப்பட்டிருக்கும் என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழ் இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் அலுவல்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 108-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளின் கீழும் பங்குதாரர்களுக்கு இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது. இது குறித்த அறிவிப்பை தனியார் விரைவு அஞ்சல் / மின் அஞ்சல் மூலமாக அனுப்பும் பணியை கம்பெனியானது 08.06.2017 மற்றும் 09.06.2017 ஆகிய தினங்களில் நிறைவு செய்துவிட்டது.

கட்-ஆப் தேதியான 29.06.2017 அன்றுள்ளபடி பங்குதாரர்களின் வாக்குரிமை கணக்கிடப்படும். மின்னணுவியல் வாக்குப்பதிவு 03.07.2017, திங்கட்கிழமையன்று காலை 10.00 மணியளவில் துவங்கி, 05.07.2017, புதன்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு (இந்த இரு தினங்கள் உள்பட) முடிவடையும். மேற்குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு பங்குதாரர்கள் மின்னணுவியல் வாக்குப்பதிவில் தங்களது வாக்கை பதிவு செய்ய இயலாது. மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பான தகவல்களை கம்பெனியின் www.elnettechnologies.com என்ற இணையதளத்தில் காணலாம்.

மின்னணுவியல் வாக்குப்பதிவுப் பணியை நடத்துவதற்காக M/s. BP & அசோசியேட்ஸ், நிறுவனத்தின் செயலாளர்கள் பயிற்சி சென்னை - நிறுவனத்தை கம்பெனியின் இயக்குனர்கள் குழுவானது ஆய்வாளராக நியமித்துள்ளது.

மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பான முறையீடுகளுக்கு விளக்கம் அளிக்க கம்பெனி செயலாளர் திரு. S.லட்சுமி நரசிம்மன் பொறுப்பாவார். தொடர்புகொள்ள வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:-

போன்: 044-2254 1098 / 2254 1337 Ext.:217. இ-மெயில்: elnet@md4.vsnl.net.in.

09.07.2017 அன்று மாலை 05.00 மணிக்கு மிகாமல் கம்பெனியின் தலைவர் அல்லது அவர் இல்லாத நிலையில் ஏதேனும் இயக்குனர் மின்னணுவியல் வாக்குப்பதிவு முடிவை அறிவிப்பார் என்பதை பங்குதாரர்கள் தயவுசெய்து அறியவும். ஆய்வாளரின் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட முடிவுகளை www.elnettechnologies.com என்ற கம்பெனியின் இணையதளத்திலும், மேலும் CDSL நிறுவனத்தின் இணையதளத்திலும் காணலாம். மேலும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் நிறுவனத்திற்கு மின்னணுவியல் வாக்குப்பதிவு முடிவுகள் பற்றிய தகவல் தெரிவிக்கப்படும்.

**எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெடுக்காக**

இடம்: சென்னை
தேதி: 09.06.2017

**S.லட்சுமி நரசிம்மன்**
**கம்பெனி செயலாளர்**